# தமிழீழ விடுதலைப் புலிகள்
# *Liberation Tigers of Tamil Eelam*

தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
19. 10. 1997.

பேராசிரியர் கிறிஸ்டி ஜெயரட்ணம் எலியேசர்,
ஈகிள்மொண்ட்,
விக்டோரியா,
அவுஸ்திரேலியா.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஐயா!

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அறிவுலகில் அபூர்வ சாதனைகள் புரிந்துள்ள நீங்கள், நீண்ட காலமாக எமது மக்களின் தேச சுதந்திரப் போராட்டத்திற்கு அரும்பணி ஆற்றி வந்துள்ளீர்கள். தாயக தேசத்தில் பாசம் கொண்டு நீங்கள் ஆற்றிய நற்பணிக்கு எமது விடுதலை இயக்கத்தின் சார்பிலும், எமது மக்களின் சார்பிலும் எனது உளப்பூர்வமான நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவுஸ்திரேலிய நாட்டில் வாழ்ந்த போதும், தமிழீழத் தாய் பெற்ற மண்ணின் மைந்தர் என்ற தேசாபிமானப் பற்றுணர்வுடன் தமிழீழ மக்களின் விடிவிற்காகவும் தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகவும் நீங்கள் ஆற்றிய அரும்பணி மெச்சத்தக்கது. தன்னாட்சி உரிமை கோரும் எமது மக்களின் விடுதலைப் போராட்டம் நியாயமானது என்பதை நன்குணர்ந்து எமது உரிமைப்போருக்காக நீங்கள் குரல் கொடுத்து வந்துள்ளீர்கள். அவுஸ்திரேலிய அரச மட்டத்தில் எமக்காக நியாயம் கேட்டீர்கள்.

தமிழீழ மக்கள் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டுமென்பது உங்களது தணியாத இலட்சியமாக இருந்து வருகிறது. அந்த உன்னத இலட்சியத்திற்காகத் துணிவுடனும் நேர்மையுடனும் பணியாற்றி வந்தீர்கள். நீங்கள் உயர்ந்த மனிதர்; உன்னத தேசப்பற்றாளர்.

நற்பணியாற்றும் நல்ல மனிதர்களுக்கு மதிப்பளித்து கௌரவம் செலுத்துவது தமிழரின் பண்பாடு. இந்த சீரிய மரபிற்கு ஏற்ப, உங்களது இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, உங்களது நற்பணியைப் பாராட்டுமுகமாக **"மாமனிதர்"** என்ற அதியுயர் தேசிய விருதை உங்களுக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்.

உங்களது நற்பணி தொடரவும், உங்களது நல்வாழ்வு சிறப்புறவும் எனது நல்லாசிகள்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

அன்புடன்,

வே.பிரபாகரன்

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.